## க.பொ.த (சாதாரண தரம்)

## பின்னூட்டல் செயற்பாட்டுப் பத்திரம்

## 02 – அர்கானுல் இஸ்லாம்

# இஸ்லாம்






**உள்ளடங்கும் தேர்ச்சிகள்:**

**தரம் 10: 10.2.1, 10.2.2, 10.2.3, 10.2.4**

**தரம் 11: 11.2.1, 11.2.2, 11.2.3, 11.2.4 11.2.5**

**சமயங்கள் மற்றும் விழுமியக் கல்விக் கிளை**

**கல்வி அமைச்சு**

**சுருக்கமான விடை தருக.**

01. **அல் மாஉல் முஸ்த.்.மல்** என்றால் என்ன?

.................................................................................

02. **ஹதஸ்** என்றால் என்ன? அதன் வகைகளை குறிப்பிடுக?

...……………………………………………………………………

……………………………………………………………………

……………………………………………………………………

……………………………………………………………………

03. பலஸ்தீனில் அமைந்துள்ள முஸ்லிம்களின் புனித தலம் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?

……………………………………………………………………

04. ஸகாத் பெறத் தகுதியானவர்களில் '**காரிமூன்**' யார் என்பதை தெளிவுபடுத்துக.

……………………………………………………………

05. இஸ்லாமிய சட்ட அறிஞர்கள் வகைப்படுத்திய தண்ணீரின் பிரதான வகைகளுள் இரண்டைக் குறிப்பிட்டு ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் தருக.

……………………………………………………………………

……………………………………………………………………..

06. ஸகாத் பெறத் தகுதியானோரில் பகீர், மிஸ்கீன் ஆகியோரை வேறுபடுத்திக் காட்டுக.

……………………………………………………………………

……………………………………………………………………

07. மஸ்ஜிதுன் நபவியின் சிறப்புக்கள் இரண்டு தருக.

..........................................................................................................

.....................................................................................................

……………………………………………………………………

……………………………………………………………………

08. இபாதா என்பதனை வரைவிலக்கணப்படுத்துக

..........................................................................................................

....................................................................................................

09. பர்ளு கிபாயா என அடையாளப்படுத்தப்படும் செயற்பாடுகள் இரண்டைக் குறிப்பிடுக.

……………………………………………………………………

……………………………………………………………………

10. **ஸமி அல்லாஹு லிமன் ஹமிதா** என்று கூறி இ∴திதாலுக்கு வந்ததும் அங்கு ஓதவேண்டிய துஆவை உமது மொழியில் எழுதுக.

...................................................................................................

...................................................................................................

11. ஸுஜூதின் போது நிலத்திற்படவேண்டிய நெற்றி மற்றும் இரு உள்ளங்கைகள் தவிர்ந்த ஏனைய நான்கு உறுப்புக்களையும் குறிப்பிடுக.

...................................................................................................

...............................................................

12. ஸக்காத் பெறுவோரில் பீஸபீலில்லாஹ், இப்னு ஸபீல் என்போரை வேறுபடுத்திக் காட்டுக.

...................................................................................................

...................................................................................................

13. ஹஜ்ஜுக்கு நிய்யத்து வைக்கும் முறைகளுள் அல் இப்ராத் என்பதன் விளக்கம் யாது?

...................................................................................................

...............................................................

14. நஜீஸின் வகைகள் மூன்றையும் உதாரணத்துடன் குறிப்பிடுக.

...................................................................................................

...................................................................................................

...................................................................................................

15. ஹஜ், உம்ரா ஆகிய அமல்களில் பேணப்படவேண்டிய பர்ளான விடயங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

...................................................................................................

...............................................................

16. தொழுகையில் ஓதுதல் மூலம் நிறைவேற்றப்படும் பர்ளுகள் இரண்டை எழுதுக.

...................................................................................................

...................................................................................................

17. இரவில் நிறைவேற்றப்படும் ஸுன்னத்தான தொழுகைகள் இரண்டைக் குறிப்பிடுக

...................................................................................................

...................................................................................................

18. ஸகாத் பெறத் தகுதியாகும் நான்கு பிரிவினரைப் பெயரிடுக.

...................................................................................................

...................................................................................................

19. தொழுகையின் பர்ளுகள் நான்கைத் தருக.

.......................................................................................................

...................................................................

20. ஸுன்னத்தான நோன்புகள் நான்கைக் குறிப்பிடுக.

……………………………………………………...…………

……………………………………………

21. ஸகாத் கடமையாகும் இரண்டு பொருட்களைக் குறிப்பிடுக.

……………………………………………………..

22. ஜனாஸாவுக்காக நிறைவேற்ற வேண்டிய நான்கு கடமைகளை எழுதுக.

……………………………………………………..…………

……………………………………………………………..

23. நோன்பின் ஸுன்னத்துக்கள் இரண்டைக் குறிப்பிடுக.

……………………………………………………………………

…………………………………………

24. நோன்பு நோற்பதற்கு ஹராமான நாட்கள் எவை?

……………………………………………………………………

…………………………………………

25. தொழுகையின் ஆன்மீகப் பயன்பாடுகள் இரண்டை குறிப்பிடுக.

……………………………………………………………………

…………………………………………

26. நோன்பை நோற்காதிருக்க அனுமதிக்கப்பட்ட இரு பிரிவினரைக் குறிப்பிடுக.

……………………………………………………………………

…………………………………………

27. ரமழானில் நிறைவேற்றப்படும் சுன்னத்தான இரு முக்கிய கிரியைகளைக் குறிப்பிடுக.

……………………………………………………………………

…………………………………………

28. ஒரு முஸ்லிமுக்குக் குளிப்பு வாஜிபாகும் இரு சந்தர்ப்பங்களைத் தருக.

………………………………………………………

………………………………………………………

29. ஒரு முஸ்லிம் புனித மக்காவில் மாத்திரம் நிறைவேற்றக் கூடிய இரு கிரியைகளைக் குறிப்பிடுக.

………………………………………………………

30. ஸக்காத்துக்குரிய சகல நிபந்தனைகளும் பூர்த்தியான நிலையில் ஒருவரிடம் காணப்பட்ட 20 இலட்சம் ரூபாவுக்கு அவர் வழங்க வேண்டிய ஸகாத் தொகை யாது?

.........................................................................

31. "ஹுகூகுல் இபாத்" இற்கு இரு உதாரணங்களைத் தருக.

.....................................................................

.....................................................................

32. தொழுகையைத் தவறவிடுபவன் பற்றி நபி (ஸல்) அவர்கள் எச்சரித்துக் கூறிய மூன்று கருத்துக்களைத் தருக.

.....................................................................

.....................................................................

.....................................................................

33. பர்ளான நோன்புக்கு இஸ்லாம் வழங்கியுள்ள முக்கியத்துவங்கள் ஐந்தினைச் சுருக்கமான விளக்குக.

.............................................................................

.............................................................................

.............................................................................

.............................................................................

34. ஸகாத்தின் சமூகப் பயன்பாடுகள் இரண்டைக் குறிப்பிடுக.

.....................................................................

.....................................................................

35. நோன்பினால் கிடைக்கப்பெறும் பயன்பாடுகள் மூன்றைக் குறிப்பிடுக.

.....................................................................

.....................................................................

.....................................................................

36. தொழுகையின் முக்கியத்துவம் பற்றிக் குறிப்பிட்டு, அதன் மூலம் கிடைக்கப்பெறும் மூன்று சமூகப் பயன்களைத் தெளிவுபடுத்துக.

...........................................................................................

...........................................................................................

...........................................................................................

37. தவாபின் வகைகளில் இரண்டினைப் பெயரிடுக.

...........................................................................................

.........................................................................................

38. ஹஜ்ஜின் மூலம் கிடைக்கும் பயன்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

…………………………………………………………………………

……………………………………………………………………

……………………………………………………………………

39. ஹஜ்ஜின் வாஜிபுகள் ஐந்தினைச் சுருக்கமாக குறிப்பிடுக.

…………………………………………………………………………

…………………………………………………………………………

……………………………………………………………………

…………………………………………………………………..

40. கஸ்ரு-ஜம்உத் தொழுகை பற்றி சுருக்கமாக குறிப்பிடுக

…………………………………………………………………………

………………………………………………

41. துஆவின் முக்கியத்துவம் பற்றி ஒரு ஹதீஸை குறிப்பிடுக?

…………………………………………………………………………

………………………………………………

42. ஸுப்ஹுத் தொழுகையின் பின் ஓத வேண்டுமென்று நபியவர்கள் கற்றுத் தந்த மூன்று துஆக்களை உமது மொழியில் குறிப்பிடுக.

…………………………………………………………………………

………………………………………………

……………………………………………………

43. தஸ்பீஹ், தஹ்மீத், தக்பீர் என்னும் பதங்களைத் தெளிவுபடுத்துக.

…………………………………………………………………………

………………………………………………

44. தயம்மும் செய்யும் முறையை சுருக்கமாக விளக்குக.

…………………………………………………………………………

…………………………………………………………………………

………………………………

45. வெள்ளிக்கிழமையின் சிறப்புக்கள் இரண்டை சுருக்கமாக குறிப்பிடுக.

…………………………………………………………………………

………………………………………………

46. வெள்ளிக்கிழமை நாட்களில் நீர் செய்யும் நல்லமல்களின் மூலம் முஸ்லிம்களிடையே சகோதரத்துவ உணர்வை வெளிப்படுத்தக்கூடிய செயற்பாடுகள் மூன்றைக் குறிப்பிடுக.

…………………………………………………………………………

………………………………………………………………………..

……………………………………………………………………

47. ஜமாஅத் தொழுகையின் முக்கியத்துவங்கள் நான்கு தருக.

………………………………………………………………………

……………………………………………………………………..

………………………………………………………………………

…………………………………………………………..……

48. ஸதகதுல் பித்ரா பற்றிச் சுருக்கமாக விளக்குக.

………………………………………………………………………

…………………………………………………………….………

49. உமது உலகியல் செயற்பாடொன்றை எவ்வாறு இபாதத்தாக ஆக்கிக் கொள்வீரென விளக்குக.

………………………………………………………………………

……………………………………………………………………

………………………………………………………………………

……………………………………………………………………

50. ஒரு முஸ்லிம் தனது வாழ்வில் தயம்மும் செய்வதற்கான சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

………………………………………………………………………

………………………………………………………………….…

51. தொழுகையில் நீர் ஸலாம் கொடுத்தவுடன் செய்யக் கூடிய சுன்னத்தான அமல்கள் நான்கைக் குறிப்பிடுக.

………………………………………………………………………

…………………………………………………………………….

52. நோன்பின் பிரதான வகைகளைக் குறிப்பிடுக.

………………………………………………………………………

……………………………………………………………………..

**<u>விடைகள்</u>**

01. பயன்படுத்தப்பட்ட நீர்
02. ஒரு முஸ்லிம் சிறு தொடக்கு, பெருந் தொடக்கு நிலையை அடைதல் “ஹதஸ்” எனப்படும்.

    **ஹதஸ் இரு வகைப்படும்,**

    **சிறு தொடக்**கு – வுழூ இன்றி இருக்கும் நிலை

    **பெருந்தொடக்கு** – குளிப்பு கடமையாகும் நிலை
03. மஸ்ஜிதுல் அக்ஸா
04. மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட தேவைக்காக கடன்பட்டு அதனை செலுத்த முடியாத நிலையில் உள்ள கடன்காரர்கள்.
05. அல் மாஉத் தஹூர் - மிகச் சுத்தமான நீர் (உம்: கடல் நீர், ஆற்றுநீர்,குழாய்நீர்)

    அல் மாஉத் தாஹிர் - சுத்தமான நீர் (உம்: தேனீர், பன்னீர், மென்பானங்கள்)

    அல் மாஉல் முதனஜ்ஜிஸ் - அசுத்தமான நீர் (உம்: சாக்கடை நீர், மதுபானம்)
06. பகீர் : எவ்வித வருவாயும் அற்ற பரம ஏழை

    மிஸ்கீன் : தனக்கும் தனது பாராமரிப்பில் உள்ளவர்களுக்கும் போதுமான அளவு செலவு செய்யக் கூடிய வருமானம் அற்றவர்கள்
07. புனித யாத்திரை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்ட (மூன்று) தலங்களில் ஒன்று

    இங்கு நிறைவேற்றப்படும் ஒரு தொழுகை ஆயிரம் தொழுகைகளுக்குச் சமமானது.

    நபியவர்களின் மிம்பருக்கும் வீட்டுக்கும் இடைப்பட்ட பகுதி சுவனத்தின் சோலை என நபியவர்களினால் கூறப்பட்டுள்ள இடம் அமைந்துள்ளமை.
08. வணங்குதல், வழிபடுதல், கீழ்படிதல் என்பது கருத்தாகும். அல்லாஹ் எமக்கு ஏவியவற்றை எடுத்து நடப்பதனூடாகவும் தடுத்தவற்றை விலகி நடப்பதன் ஊடாகவும் அல்லாஹ்வுக்கு கீழ்படிந்து நடப்பதாகும். அல்லாஹ்வின் மீது கொண்ட உச்ச அன்புடன் கூடிய பூரண கட்டுப்பாடு எனவும் கூறலாம்.
09. 
    - ஜனாஸாவுக்கான கடமைகள்,
    - மார்க்க அறிஞர்களை உருவாக்குதல்,
    - சமூகத்துக்குத் தேவையான விஞ்ஞானிகளை உருவாக்குதல்,
    - பெண் மகப்பேற்று மருத்துவர்களை உருவாக்குதல்

10. “ரப்பனா லகல் ஹம்து மில்அஸ்ஸமாவாதி வமில்அல் அர்ழி வமிழ்அ மாஷி∴த மின் சைஇன் ப∴த்”
11. இரு பாதங்கள் (இரு பாதங்களினதும் விரல் நுனிகளின் உட்பகுதி)
இரு முட்டுக்கால்கள் (முழங்கால்கள்)
12. பீஸபீலில்லாஹ் : அல்லாஹ்வின் பாதையில் இருப்போர்
இப்னு ஸபீல் : அனுமதிக்கப்பட்ட பயணம் மேற்கொண்டு தன் தேவைகளை நிறைவு செய்ய வழியில்லாதோர் (வழிப்போக்கர்)
13. ஹஜ்ஜை மாத்திரம் நிறைவேற்ற நிய்யத்து வைத்தல்
14. **சாதாரண நஜீஸ்-** மலம், சிறுநீர், இரத்தம், சீழ், வாந்தி
**இலகுவான நஜீஸ்** -தாய்ப்பாலை மட்டும் உணவாக உட்கொள்ளும் இரண்டு வயதுக்குட்பட்ட ஆண் குழந்தையின் சிறுநீர்.
**கடுமையான நஜீஸ் -** நாய், பன்றி என்பவற்றின் மலம், சலம், உமிழ்நீர், வியர்வை, இரத்தம் போன்றன.
15. நிய்யத்து வைத்தல், இஹ்ராம் கட்டுதல், க∴பாவைத் தவாப் செய்தல், ஸபா-மர்வா மலைகளுக்கிடையில் ஸ∴யு செய்தல், தலைமுடியைக் கத்தரித்தல் (ஹல்க்)
16. ஸூரத்துல் பாத்திஹா
இரண்டாம் அத்தஹிய்யாத்
17. தஹஜ்ஜுத், வித்ர்
18. பகீர், பீ ஸபீலில்லாஹ், மிஸ்கீன், அர்ரிகாப், முஅல்லபதுல் குலூப், காரிமூன், இப்னு ஸபீல், ஆமிலூன்.
19. நிற்க முடியுமானவர்கள் நின்று தொழல், நிய்யத்து வைத்தல், தக்பீருத் தஹ்ரீமா கூறல், ஸூரத்துல் பாத்திஹா ஓதல், முதலாம் ஸலாம் கூறல்.
20. வாராந்தம், மாதாந்தம், வருடாந்தம் நோற்கும் நோன்புகள் எவையேனும்.
(**வாராந்தம்** : திங்கள், வியாழன்,
**மாதாந்தம்-** அய்யாமுல் பீழ்,
**வருடாந்தம்** - ஷ∴பான், அய்யாமுத்தஷ்ரீக்)
21. கால்நடைகள்
பணம்
தங்கம், வெள்ளி
தானியங்கள்
வியாபாரப் பொருட்கள்
22. 1.குளிப்பாட்டுதல்
2.கபனிடுதல்
3.தொழுவித்தல்
4.அடக்கம் செய்தல்
23. ஸஹர் செய்தல்
நோன்பு திறப்பதை விரைவுபடுத்துவது

நீர் மற்றும் ஈத்தம் பழத்தினால் நோன்பு திறத்தல்
நோன்பு திறந்த பின்னர் துஆ ஓதுவது

24. இரு பெருநாள் தினங்கள்
அய்யாமுத் தஷ்ரீக்குடைய தினங்கள்
25. இறையச்சத்துடன் வாழ வழிவகுக்கின்றது
தொழுபவனுக்கு இறையருள் கிடைக்கின்றது.
சுவனத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பு கிடைக்கின்றது.
26. நோயாளர்கள், ஆகுமான பிரயாணத்தில் ஈடுபட்டவர்கள்
27. குர்ஆன் ஓதல்,
ஸதகா வழங்குதல்,
நோன்பாளிக்கு நோன்பு திறக்க வைத்தல்
இரவில் நின்று வணங்குதல்
அல்குர்ஆன் ஓதுதல்
மஸ்ஜிதில் இ:.திகாப் இருத்தல் (குறிப்பாக இறுதிப் பத்தில்)
ரமழானில் உம்ரா செய்தல்
28. ஒரு முஸ்லிம் மரணமடைதல், தூக்கத்தில் அல்லது விழிப்பில் இந்திரியம் வெளியாதல், ஆண்-பெண் உடலுறவு கொள்ளல், ஹைழ் ஏற்படல், நிபாஸ் ஏற்படல்.
29. ஹஜ், உம்ரா
30. 2000000/100X2.5 = 50000.00
31. - தனது உடலுக்கு தீங்கு செய்து கொள்ளாதிருத்தல்
    - பிற மனிதர்களது உயிர், உடல், மானம் என்பவற்றைப் பாதுகாத்தல்
    - மரம் செடி கொடிகள் மீது அன்பு காட்டுதல்
    - உயிரினங்களுடன் ஜீவகாருன்யமாக நடத்தல்.
32. ‘‘யார் ஒரு வேளை தொழுகையை தவறவிடுகின்றாரோ அவர் தன் குடும்பம், சொத்து என்பவற்றை தொலைத்து விட்டு நிற்கும் தனி மனிதனை போலாவார். (இப்னு ஹிப்பான்)
தொழுகையை விட்டுவிடுவது குப்ருக்கு இட்டுச் செல்லும் (முஸ்லிம்)
யார் தொழுகையைப் பேணவில்லையோ, அவர் பிர்அவுன், நும்ரூத், ஹாமான், உபை இப்னு கலப் போன்றவர்களுடன் மறுமையில் எழுப்பப்படுவார். (அஹ்மத்)
33.
    - நோன்பு ஒரு கட்டாய கடமை(பர்ளு ஐன்)
    - இறையச்சத்தை ஏற்படுத்தக் கூடியது (தக்வா)
    - பாவங்களுக்கு மன்னிப்பையும் பரிகாரத்தையும் ஏற்படுத்தக்கூடியது.
    - ‘‘நோன்பு எனக்குரியது. அதற்கு நானே கூலி வழங்குவேன்’’ என அல்லாஹ் சிறப்பித்துள்ளான்.

- பன்மடங்கான கூலியைப் பெற்றுத் தரக்கூடியது.
- சுவனத்தில் ரையான் எனும் வாயிலினூடாக நுழையும் பாக்கியத்தைப் பெற்றுத் தரக்கூடியது.

34.

- சமூகத்தில் பரஸ்பர அன்பு, கூட்டுப்பொறுப்பு, ஒற்றுமை வளர்ச்சியடையும்
- சமூகத்தில் பாரிய பொருளாதார ஏற்றத்தாழ்வு ஏற்படாதிருக்க வழிவகுக்கும்.
- வறுமையை இல்லாதொழிக்க உதவும். இதனால், திருட்டு, கொள்ளை போன்ற குற்றச் செயல்கள் குறைந்து நிம்மதியும் பாதுகாப்பானதுமான சூழல் உருவாக வழி பிறக்கும்.
- பொருளாதாரம் விருத்தியடையும்.
- வேலையில்லாப் பிரச்சினையை தீர்க்க உதவும்.

35.

- ஆன்மீக பயன்கள் :
  எண்ணற்ற நற்கூலியை நோன்பு பெற்றுத் தரும்
  சுவனத்தில் விசேட வாயிலினூடாக நுழைய வழி செய்யும்.
  இறையச்சத்தை ஏற்படுத்தும்
- லௌகீகப் பயன்கள் :
  ஏழைகளின் துயரங்களை உணர்ந்து உதவி செய்யப் பயிற்றுவிக்கும்.
  உடல் ஆரோக்கியத்துக்கு வழிவகுக்கும்.

36.

**அல்குர்ஆன்:** ‘‘நிச்சயமாக தொழுகை நம்பிக்கையாளர்கள் மீது நேரம் குறிக்கப்பட்ட கடமையாக இருக்கின்றது’’ (4:103)
‘‘அவர்கள் மறைவானவற்றை நம்பிக்கை கொள்வார்கள். தொழுகையையும் நிலை நாட்டுவார்கள்’’

**ஹதீஸ் :** ‘‘மு.ஃ.மினுக்கும் காபிருக்கும் இடையிலான வேறுபாடு தொழுகையை விடுவதாகும்’’ (இப்னு ஹிப்பான்)
‘‘மறுமை நாளில் அடியானிடம் முதலில் விசாரிக்கப்படுவது தொழுகையைப் பற்றியே ஆகும். அது சீராக அமைந்தால் அனைத்தும் சீராக அமைந்து விடும்’’

**சமூகப் பயன்கள்:**

- ஒருவரோடு ஒருவர் பரஸ்பர தொடர்பு ஏற்படல்
- தலைமைத்துவக் கட்டுப்பாட்டுப் பயிற்சி கிடைத்தல்
- சமத்துவம், சகோதரத்துவம் வலுப்பெறல்

- கஷ்ட துன்பங்களை அறிந்து உதவி செய்ய வாய்ப்பு ஏற்படல்
- நேர முகாமைத்துவப் பயிற்சி கிடைத்தல்

37. மக்காவுக்குள் நுழைந்ததும் செய்யும் தவாப் - **தவாபுல் குதூம்** மக்காவிலிருந்து வெளியேறும் போது செய்யும் தவாப்- **தவாபுல் விதா**
ஹஜ்ஜில் பர்ளான தவாப் - **தவாபுல் இபாழா**

38.
- தியாகம், பொறுமை, இறையச்சம் போன்ற பண்புகளை வளர்த்தல்
- மறுமையில் சுவனம் கிடைத்தல்
- பாவங்கள் மன்னிக்கப்பட்டு அன்று பிறந்த பாலகன் போல் ஆதல்.
- சகோதரத்துவம், சமத்துவம், ஒற்றுமை போன்ற பண்புகளைப் பெறல்.
- இஸ்லாமிய வரலாற்றுத் தடங்களுடன் நேரடி அனுபவத்தைப் பெறல்

39.
- குறிப்பிட்ட மீக்காத்தில் நிய்யத்து வைத்தல்
- துல்ஹஜ் 10 ஆம் நாள் இரவு முஸ்தலிபாவில் தங்குதல்
- அய்யாமுத் தஷ்ரீக்குடைய நாட்களில் மினாவில் தங்குதல்
- துல்ஹஜ் 10 ஆம் நாள் ஜம்ரத்துல் அகபாவில் ஏழு கற்களை எறிதல்
- தவாபுல் விதாவை நிறைவேற்றுதல்

40. **கஸ்ரு** என்பது தொழுகையைச் சுருக்கித் தொழுவதைக் குறிக்கும். **ஜம்உ** என்பது சேர்த்துத் தொழுவதைக் குறிக்கும்.
- இது பிரயாணிகளுக்கு தொழுகையை நிறைவேற்ற வழங்கப்பட்ட சலுகையாகும்.
- நான்கு ரக்கஆத் கொண்ட தொழுகையை இரண்டு ரக்கஆத் ஆக தொழுவதை கஸ்ரு என்போம்.
- நான்கு ரக்கஆத் கொண்ட தொழுகையை மாத்திரமே கஸ்ரு செய்ய முடியும். ளுஹர், அஸர் தொழுகைகளை மஃரிப் - இஷா தொழுகைகளையே சேர்த்துத் தொழ முடியும்.
- கஸ்ரு-ஜம்உ என்பன தொழுகையை எந்த நிலையிலும் விட்டு விடக் கூடாது என்பதை உர்த்துகின்றது.
- ஜம்உத் தொழுகை ஜம்உத் தக்தீம், ஜம்உத் தஃகீர் என இரு வகைப்படும்.

41.

- துஆ ஒரு வணக்கம் என்று ஹதீஸ் கூறுகின்றது.
- அல்லாஹ் தன்னிடம் கேட்பதையே விரும்புகின்றான் என்றும், மனிதன் அல்லாஹ்விடம் கேட்காதபோது அவன் கோபப்படுகின்றான் என்று ஹதீஸ் கூறுகின்றது.
- தொழுகையின் பல இடங்களில் துஆக்கள் இடம்பெறுகின்றமை. (றுகூஉ, ஸுஜூது, அத்தஹிய்யாத், நடுஇருப்பு).
- அல்லாஹ்விடம் துஆக் கேற்பதன் மூலம் மனிதன் தான் அல்லாஹ்வின் அடிமை என்பதனை வெளிப்படுத்துகின்றான்.
- நாளாந்த வாழ்க்கையில் ஓதப்பட வேண்டிய துஆக்கள் குர்ஆனிலும், ஸுன்னாவிலும் இடம்பெற்றுள்ளன.

42.

- கலிமதுத் தௌஹீத் 10 தடவைகள்
- அல்லாஹும்ம அஜிர்னீ மினன் நார் 7 தடவைகள்
- ''அல்லாஹும்ம இன்னி அஸ்அலுக இல்மன் நாபிஅன், வரிஸ்கன் தைய்யிபன், வ அமலன் முதகப்பலா''

43. **தஸ்பீஹ்** என்பது ஸுப்ஹானல்லாஹ் என அல்லாஹ் மிகத் தூய்மையானவன் என்பதையும்,
**தஹ்மீத்** என்பது அல்ஹம்துலில்லாஹ் என அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் என்பதையும்
**தக்பீர்** என்பது அல்லாஹு அக்பர் என அல்லாஹ் மிகப் பெரியவன் என்பதையும் குறிக்கும்.
44. நிய்யத்துடன் சுத்தமான புழுதியுள்ள மண்ணைப் பரப்பி வைத்து இரு உள்ளங்கைகளையும் மண்ணில் பதித்தெடுத்து புறங்கை இரண்டையும் ஒன்றோடொன்றை தட்டிய பின் இரு கைகளாலும் முகத்தைத் தடவுதல், மீண்டும் ஒரு முறை இரு கைகளையும் மண்ணில் பதித்தெடுத்து புறங்கை இரண்டையும் ஒன்றோடொன்று தட்டிய பின், வலது கையின் பிற்பகுதியை இடதுகையின் உள்ளங்கையில் வைத்து முழங்கை வரையும் நகர்த்திச் சென்று மஸ்ஹு செய்தல். அவ்வாறே இடது கைக்கும் மஸ்ஹு செய்தல் ஆகும்.
45. நாட்களில் தலையாய நாள் வெள்ளிக்கிழமை ஆகும். உலகம் படைக்கப்பட்ட உலகம் அழியும் நாள், ஜும்ஆ தொழுகை நடைபெறும் நாள், பிரார்த்தனை அங்கீகரிக்கப்படும் நேரம் உள்ளடக்கியுள்ள நாள்.
46. இத்தினம் சிறப்புப் பெறுவதனால் ஸதகாக்கள், ஏழைகளுக்கு உணவளித்தல் போன்ற காருண்ய செயற்பாடுகளில் ஈடுபடல்.

ஜும்ஆவுக்கு ஒன்று சேர்வதன் மூலம் அன்பு, அன்னியோன்யம், சகோதரத்துவம் போன்றவற்றை உருவாக்கலாம்.
முஸ்லிம்களின் விவகாரங்கள் குறித்து ஆலோசனை செய்து தீர்மானங்களை முன்னெடுக்கலாம்.

47. தலைமைத்துவத்துக்கு கட்டுப்படும் பயிற்சி
ஒற்றுமை ஐக்கியத்துக்கான பயிற்சி
சகோதரத்துவம் சமாதானம் ஏற்படல்,
நேரத்துக்கு இயங்குகின்ற பயிற்சி
ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள வாய்ப்பு
நபி (ஸல்) அவர்களின் எச்சரிக்கையிலிருந்தும் தப்பிக்கொள்ள வாய்ப்பு
தனித்துத் தொழுவதை விட ஜமாஅத்தாக தொழுவது 27 மடங்கு நன்மை

48.

- இது ரமழான் காலத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய ஓர் இபாதத்.
- நோன்பில் ஏற்படும் தவறுகளுக்கு இது ஒரு பிரதியீடாக அமைதல்.
- பெருநாள் செலவுகளுக்கு மேலதிகமாக பொருள் கொண்டிருப்போர் மீது இது கடமை.
- பெருநாள் தொழுகைக்கு முன்பு இது வழங்கப்பட வேண்டும்.

49. நாளாந்த செயற்பாடுகளில் இஸ்லாம் சொல்லும் நிபந்தனைகள் பேணப்படும் பட்சத்தில அவை இபாதத்தாக மாறுகின்றன.
    1. ஷரீஆவின் அனுமதி
    2. தூய்மையான எண்ணம்
    3. ஷரீஆவின் வரையறை
    4. அடிப்படை வணக்கங்களுக்கு தடையின்றி இருத்தல்
    5. நேர்த்தியாகவும் ஒழுங்காகவும் இருத்தல்

50.

- கடமையான வுழூவுக்காகவோ, குளிப்புக்காகவோ நீரைப் பயன்படுத்த முடியாத போது,
- நோய் காரணமாக,
- நீரின்மை,
- நீரைப்பயன்படுத்த முடியாத போது,
- குடிப்பதற்கு மாத்திரம் நீர் உள்ள போது.

51. தஸ்பீஹ் ஓதல், இஸ்தி்.பார் ஓதுதல், குல்ஸூராக்கல் ஓதுதுதல், ஆயத்துல் குர்ஸி ஓதுதல்,
52. ஸுன்னத்தான நோன்பு
பர்ளான நோன்பு
நேர்ச்சை நோன்பு